www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# முதல் பருவத்தேர்வு – 2024

**B**

## தொகுத்தறி மதிப்பீடு – சமூக அறிவியல்

**வகுப்பு – 6** **மதிப்பெண்கள் : 60**

**காலம் : 2.00 மணி**

### பகுதி – I

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** 18x1=18

1. ஆற்றங்கரைகள் 'நாகரிகத்தொட்டில்கள்' என அழைக்கப்படக் காரணம்.

   அ) மண் மிகவும் வளமானதால்.

   ஆ) சீரான காலநிலை நிலவுவதால்

   இ) போக்குவரத்திற்குப் பயனுள்ளதாக இருப்பதால்

   ஈ) பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்

2. கீழடி அகழாய்வுகளுடன் தொடர்புடைய நகரம்.

   அ) மதுரை ஆ) காஞ்சிபுரம் இ) பூம்புகார் ஈ.) ஹரப்பா

3. **கூற்று** : பழைய கற்கால மனிதர்கள் வேட்டையாடச் செல்லும்போது நாய்களை உடன் அழைத்துச் சென்றனர்.

   **காரணம்** : பிற விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து அவனுக்கு உணர்த்தின.

   அ) கூற்று சரி, காரணம் தவறு

   ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி

   இ) கூற்று தவறு, காரணம் சரி

   ஈ) கூற்று தவறு, காரணமும் தவறு

4. புவி தன் அச்சில் சுழல்வதை இவ்வாறு அழைக்கிறோம்.

   அ) சுற்றுதல் ஆ) பருவகாலங்கள் இ) சுழலுதல் ஈ) ஓட்டம்.

5. உறைந்த கண்டம் ______________.

   அ) வட அமெரிக்கா ஆ) ஆஸ்திரேலியா

   இ) அண்டார்டிகா ஈ) ஆசியா

6. 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற சொற்றொடரை உருவாக்கியவர்.

   அ) ஜவஹர்லால் நேரு. ஆ) மகாத்மா காந்தி

   இ) அம்பேத்கர் ஈ) இராஜாஜி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

7. ____________ மிகப்பழமையான நாகரிகம்.
8. கோவில் நகரம் என அழைக்கப்படுவது ____________.
9. உலகின் மிகப் பெரிய கண்டம் ____________.
10. சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் ____________.

## III. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 11. மொகஞ்சதாரோ | – | இந்தியா |
| 12. எழுதப்பட்ட பதிவுகள் | – | பசிபிக் பெருங்கடல் |
| 13. மரியானா அகழி | – | செப்புத் தகடுகள் |
| 14. வேற்றுமையில் ஒற்றுமை | – | இறந்தோர் மேடு |

## IV. சரியா? தவறா?

15. மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு சக்கரம் ஆகும்.
16. மலைகள் இரண்டாம் நிலை நிலத்தோற்றங்கள் ஆகும்.

## V. பொருந்தாததை வட்டமிடு

17. புளூட்டோ, ஏரிஸ், செரஸ், அயோ.
18. தாரை ஊர்தி, சுற்றுக்கலம், வானூர்தி, விண்கலம்.

### பகுதி – ஆ

## VI. வேறுபடுத்தி காரணம் கூறு.

19. **வேறுபடுத்துக**: (அ) பெருங்கடல் – கடல் 2+1=3
**காரணம் கூறு**: (ஆ) புவியின் சுழலும் வேகம் துருவப் பகுதிகளில் சுழியமாக உள்ளது.

## VII. எவையேனும் 7 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளி. 7x2=14

20. அருங்காட்சியகத்தின் பயன்கள் யாவை?
21. பழங்கால வேட்டையாடும் முறைகளைப் பற்றிக் கூறவும்.
22. பரிணாமம் என்றால் என்ன?
23. பெருங்குளம் பற்றி உனக்கு தெரிந்தவற்றைக் கூறு?



24. லோத்தல் நகரத்துடன் தொடர்புடைய நாகரிகம் எது?
25. சூரிய அண்மை என்றால் என்ன?
26. பெருங்கடல் என்றால் என்ன?
27. அட்லாண்டிக் பெருங்கடலின் எல்லைகளாக உள்ள கண்டங்கள் யாவை?
28. இந்தியாவில் கொண்டாடப்படும் பல்வேறு விழாக்களில் எவையேனும் மூன்றைப் பற்றி எழுதுக.
29. பாகுபாடு என்றால் என்ன?

### பகுதி – இ

## VIII. எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விரிவான விடையளி. 4x5=20

30. பழைய கற்கால மனிதனின் வாழ்க்கை முறையை தற்கால வாழ்க்கைமுறையோடு ஒப்பிட்டு பார்.
31. லோத்தல் ஒரு கப்பல் கட்டும் தளம் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நீ அறிவது என்ன?
32. பூம்புகாரின் வணிகம் பற்றி ஒரு பத்தியளவில் எழுதுக.
33. உட்புற மற்றும் வெளிப்புறக் கோள்கள் – வேறுபடுத்துக.
34. பீடபூமி பற்றிக் குறிப்பு வரைக.
35. சமவெளி, மக்கள் நெருக்கம் மிகுந்ததாக காணப்படுகிறது. காரணம் கூறு.
36. இந்தியா "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற நாடாக இருப்பினும் நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம் விளக்குக.

### பகுதி – ஈ

## IX. இந்திய வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும். 5x1=5

37.
1. ஆதிச்சநல்லூர்
2. அத்திரம்பாக்கம்
3. பிம்பேட்கா
4. ஹன்சாகி பள்ளத்தாக்கு
5. லோத்தல்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com